பக்கங்கள் 16
விலை ரூ. 50
Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 97

சனிக்கிழமை
02 மார்ச் 2024

மாசி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055



பாக்குநீரிணையை

## நீந்திக் கடந்தார் ஹரிஹரன் தன்வந்த்!

மன்னார், மார்ச் 2
இலங்கையையும், இந்தியாவையும் பிரிக்கும் கடற்பரப்பான பாக்கு நீரிணையை 13 வயதிலேயே நீந்திக் கடந்து சாதனை புரிந்துள்ளார் ஹரிஹரன் தன்வந்த். யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டவரும்,

13

## சங்கிலி அறுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2
மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணொருவரின் ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலியை, பிறிதொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அபகரித்துச் சென்றுள்ளனர்.

13

# சாந்தனின் திருவுடல் தாயகம் வந்தடைவு!

- சடலத்தை ஒப்படைப்பதில் இலங்கையிலும் இழுத்தடிப்பு
- மரண விசாரணைகளை முன்னெடுக்க இரத்த உறவுகளை வருமாறு உத்தரவு
- ஞாயிறுக்குப் பின்னரே இறுதிக்கிரியைகள்
- பொதுமக்களின் அஞ்சலிப்புக்கும் ஏற்பாடு



யாழ்ப்பாணம், மார்ச் 2
இந்திய - இலங்கை அரசுகளின் கூட்டுச் சதியால், தமிழகத்தில் உயிரிழந்த சாந்தனின் திருவுடல், விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்று வெள்ளிக்கிழமை மதியம் வந்தடைந்தது. எனினும் பல்வேறு காரணங்களைக் குறிப்பிட்டு, சடலத்தை உறவினர்களிடம் வழங்குவதில் இலங்கையிலும் இழுத்தடிப்புத் தொடர்கின்றது.

15



## இ.போ.ச. பஸ்ஸின் அதிவேகம் பறித்தது மாணவன் உயிரை!

யாழ்ப்பாணம், மார்ச் 2
அதிவேகமாகச் சென்ற இ.போ.ச. பேருந்தொன்று மோதியதில், சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் உயர்தர விஞ்ஞானப் பிரிவு மாணவர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் - சாவகச்சேரி, மீசாலை ஐயா கடைச்சந்திப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை

15

## ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடக்கும்!

கொழும்பு, மார்ச் 2
'முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்படும். இது நூறு வீதம் உறுதி' என்று அடித்துக் கூறியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான ஆசு மாரசிங்க.
ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தல் நடத்தப்படும் என எதிரணிகள் தெரிவித்துவரும் நிலையிலேயே அவர்

15

## சாந்தனின் உடலை ஒப்படைப்பதில் தாமதம்: அஞ்சலி நிகழ்வுகளைத் தடுக்கும் நோக்கமா?

யாழ்ப்பாணம், மார்ச் 2
சாந்தனின் உடல் இந்தியாவில் இருந்து நேற்றுக் காலை இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும், இன்னமும் குடும்பத்தினரிடம் பாரப்படுத்தப்படவில்லை. இது சாந்தனுக்கான பொதுஅஞ்சலிப்புக்களைத் தடுப்பதற்கான நோக்கமா? என்று அஞ்சலி நிகழ்வுகளை ஏற்பாடு செய்தபொதுஅமைப்புகள் கேள்வி எழுப்பியுள்ளன.

15

## சஜித் அணி இராணுவ மயம்

கொழும்பு, மார்ச் 2
ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி லெப்.கேர்ணல் ரத்னப்பிரிய பந்து, ஐக்கிய மக்கள் சக்தியில் நேற்று இணைந்தார்.
ஐக்கிய மக்கள் சக்தியினதும் எதிர்க் கட்சியினதும் தலைவரான சஜித் பிரேமதாஸவைச் சந்தித்த அவர், ஐக்கியமக்கள்சக்தியில் இணைந்து தன் அரசியல் பயணத்தை ஆரம்

15

## மோ.சைக்கிள் மோதி முதியவர் உயிழப்பு!

உரும்பிராயில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 2
உரும்பிராய் வடக்குப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார். சின்னத்தம்பி அருமைநாயகம் (வயது-80) என்பவரே உயிரிழந்தவராவார்.
வீட்டுக்கு முன்பாகவுள்ள வீதியின் மறுபுறம் குப்பையைக் கொட்டிவிட்டுத் திரும்பும்போது பாதசாரிக் கடவைக்கு அண்மையில், வீதியில் வந்த மோட்டார்சைக்கிள் அவரை மோதித்தள்ளியது. படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில்

13

ஊதிய அதிகரிப்பு

## இலங்கை மத்திய வங்கியிடம் விளக்கம் கோருவதற்கு முடிவு

மார்ச் 5 முன்னிலையாக அழைப்பு

கொழும்பு, மார்ச் 2
மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட அதன் பணியாளர்களின் சம்பள அதிகரிப்புத் தொடர்பிலான விளக்கம் கோருவதற்காக மத்திய வங்கியின்

15

## வடக்கின் தீவுகளில் வலுசக்தி ஒப்பந்தம்

கொழும்பு, மார்ச் 2
வடமாகாணத்தின்மூன்று தீவுகளில் மீள்புதுப்பிக்கத்தக்க

15

## முச்சந்தி முரளி



"தெரியாமத்தான் கேக்கிறன், உவர் சஜித் கட்சி நடத்திறாரோ, ஆமியை நடத்திறாரோ எண்டு டவுட்டாத்தான் கிடக்குது பாருங்கோ"

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தனைச் சாகடித்து

# நிர்வாணமாகியது காந்திய தேசம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

**பாரத தேசத்தின் பிராந்திய நலன்களுக்கு எதிராகச் செயற்பட்டுத் தொடர்ந்தும் அவமதித்து வரும் சிறிலங்கா அரசுடன் நட்புப் பாராட்டும் காந்தியதேசம், தங்களின் அற்ப பூகோள நலன்களுக்காகத் தங்களை நோக்கி என்றுமே நேசக்கரம் நீட்டும் ஈழத்தமிழ் மக்களைத் வஞ்சிப்பதென்பது அந்த நாடு இதுவரைகாலமும் தான் கொண்ட வரலாற்றுக்கும், பெருமைகளுக்கும் இழுக்கானதாகும். அன்று முதல் இன்றுவரை காந்தியின் பெயர்கொண்டு, புரியும் கொடூரங்களால் தனக்கு மேல் போர்த்திய போர்வையைக் களைந்து நிர்வாணமாக நிற்கின்றது காந்தியதேசம்.**

இவ்வாறு சாந்தனின் மறைவு குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.
அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

**தோற்றுப்போன பாசப் போராட்டம்**

பெற்ற மகனை ஒரு முறையாவது உயிருடன் பார்த்துவிட வேண்டுமென்ற தாய்க்கும் மகனுக்கும் இடையிலான 33 ஆண்டுகள் பாசப் போராட்டத்தில் சாந்தனின் இழப்பு அனைவரையும் வெடித்தழ வைக்கின்றது. சாவு நிகழ்ந்த 28ஆம் திகதி காலையில் கூட மகன் வருவான் என்று கோவில் தீர்த்தத்துடன் காத்திருந்த தாய்க்கு வாழ்நாள் ஏக்கம் கனவாய்ப் போனது பெருந்துயர்!
ஏதும் அறியா இளைஞனாக தமிழகம் வந்தவரை மூன்று தசாப்த காலத்துக்கும் மேலாகச் சிறைப்படுத்தி, சித்திரவதை செய்து நீண்ட நெடிய சட்டப் போராட்டங்களின் பின்னர் 2022 ஆம் இந்திய ஒன்றிய உச்சநீதிமன்றம் விடுதலை செய்த பின்னரும் இயற்கை நீதிக்கு முரணாகத் தொடர்ந்து 15 மாதகாலம் திருச்சி சிறப்பு முகாமில் தடுப்பில் வைத்திருந்து உடல், உளரீதியாக பலவீனப்படுத்திச் சிறுகச் சிறுகக் கொன்று தாயையும், தாய் மண்ணையும் காண ஆவல் கொண்டிருந்தவரை இன்று உயிரற்ற சடலமாக அனுப்பி வைத்திருக்கிறது இந்தியம்.

**துரோகச் செய்தி**

29ஆம் திகதி நடந்த நீதிமன்ற வாதங் களில் தமிழக அரசு சட்டத்தரணியின் கூற்றுப்படி தமிழக அரசே சாந்தன் அவர்களை விடுவிப்பதில் காலம் தாழ்த்தியது எனும் துயரச் செய்தி, எமக்காக தமிழக உறவுகளும் தமிழக அரசும் நிற்பார்கள் என்று நம்பும் ஈழத்தமிழ் மக்களுக்கு துரோகச் செய்தியாகிப் போனது இன்னுமொரு பெருந்துயரம்!
சாந்தனைத் தாயகம் அழைத்து வருவதற்கு இறுதி ஒரு மாதகாலத்துக்குள் காணப்பட்ட ஏதுநிலையை குறிப்பிட்ட சில காலங்களுக்கு முன்னதாகவேனும் உருவாக்கிட நடவடிக்கை ஏதும் எடுத்திருந்தாற்கூட பெற்ற தாயைக் காண வேண்டும் எனும் இறுதி ஆசையையேனும் நிறைவேற்றிக் கொடுத்திருந்திருக்கலாம். ஆனால், ஏழு தமிழர்கள் இந்திய ஒன்றிய உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட ஓராண்டு காலப் பகுதிக்குள் ஈழத்தமிழ் அரசியல் தலைமைகள் கூட்டாக ஒரு தீர்க்கமான தீர்மானங்களெதனையும் மேற்கொள்ளாது, அசமந்தமாகவும், அலட்சியப் போக்குடனும் செயற்பட்டமை என்பது மன்னிக்க இயலாத கண்டனத்துக்குரியதொன்று.

**இனியாவது விடுவியுங்கள்**

நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பின்னரும் இயற்கை நீதிக்கு விரோதமாக சிறப்புச் சித்திரவதை முகாம்களில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ள எஞ்சியுள்ளவர்களையும் விடுதலை செய்து ஈழத்தமிழர்களைச் சிதைத்தெடுக் கும் சித்திரவதை முகாமுக்கு இனியாவது முடிவுரையெழுத இந்திய ஒன்றிய, மாநில அரசுகளை வேண்டுகின்றோம்.
ராஜீவ்காந்தி கொலையில் குற்றஞ் சாட் டப்பட்ட ஏனைய மூன்று ஈழத்தமிழர்
களையும் அவர்கள் விரும்பும் இடங்களில் வசிப்பதற்கு அனுமதிக்க வேண்டுவதுடன் தாயகம் திரும்ப எவரேனும் விரும்பினால் அவர்களை அழைத்து வர இனியாவது உரிய நடவடிக்ககை எடுக்குமாறு ஈழத்தமிழ் அரசியல் தரப்பு களையும் சிறிலங்கா, இந்திய அரசுகளையும் வலியுறுத்துகின்றோம்.
உயிரோடு வந்தவரை இன்று உயிரற்று அனுப்பி வைத்துள்ளது பாரதம்! சாந்தன் அவர்களின் இறப்பு - காந்தி தேசத்தின் அவலக் குறியீடு- என்றுள்ளது. (ஒ-66)

ஒரு நாள் தாமதித்தே

# சாந்தனின் இறப்புச் செய்தி தாயாருக்குச் சொல்லப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 2

முன்னாள் இந்திய பிரதமர் ரஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டு, இலங்கைக்கு அழைத்து வரப்பட தயாராக இருந்த நிலையில் உயிரிழந்த சாந்தன் என அழைக்கப்படும் தில்லையம்பலம் சுரேந்திரராஜாவின் (வயது-54) இறப்புத் தொடர்பில் அவரது தாயாருக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலையிலேதான் தகவல் சொல்லப்பட்டுள்ளது.
தனது மகன் வருவான் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் அங்கர், நெஸ்டமோல்ட்பால்மாபெட்டிகளைவாங்கி வைத்துக்கொண்டுகாவலிருந்ததாய்க்கு, சாந்தன் காலமானார் என்ற தகவலை எவ்வாறு தெரிவிப்பது என்ற தவிப்புடன் உடனடியாக அதை தெரிவிக்காமல் குடும்பத்தினர் தவிர்த்து வந்துள்ளனர்.
இந்நிலையில் சாந்தனின் உயிரிழப்பு குறித்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலையில் அவரின் தாயாருக்கு குடும்பத்தாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. தகவலைக் கேட்டதில் இருந்து தாயார் துடித்து - துவண்டுள்ளார். அவரின் உடல்நிலையை கருத்தில் கொண்டு, சாந்தனின் உயிரிழப்பு தொடர்பில் தகவல் அறிந்து அவர்களது வீட்டுக்குச் செல்லும்- நெருங்கிய உறவினர்களை மட்டும் தாயாரை பார்க்க குடும்பத்தினர் அனுமதித்து வருகின்றனர். (ஒ-100)

# மத்திய வங்கி விவகாரம்; விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 2

இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்புத் தொடர்பில் விசாரணை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
அதன்படி, நாளை இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகளை விசாரணைக்காக அழைக்கப்படவுள்ளனர் என்று நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
70 வீதமாக மத்திய வங்கி ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவல்கள் நாட்டில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் அரசியல் மட்டத்தில் இந்த விவகாரம் பேசுபொருளாக மாறியுள்ளது.
ஆளும் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் இந்த விவகாரம் தொடர்பில் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# வர்த்தக வங்கிகள் வட்டியில் மோசடி

கொழும்பு, மார்ச் 2

மத்திய வங்கி வட்டி வீதங்களை குறைத்துள்ளபோதிலும் அரச வங்கிகள் உட்பட வர்த்தக வங்கிகள் வட்டி வீதங்களைக் குறைக்கவில்லை- இவ்வாறு நாடாளுமன்ற நிலையியல் குழுக்களின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான காமினி வலேபொட தெரிவித்துள்ளார்.
வைப்புப்பணத்துக்கு ஒற்றை இலக்கத்தில் வட்டி வழங்கும் வங்கிகள்வங்கிக்கடன்களுக்கு இரட்டை இலக்கத்தில் வட்டி அறவிடுகின்றன.
அதேவேளை, வங்கிகள் வங்கிக் கடன்களுக்கு 16 வீதத்துக்கு மேற்பட்ட வட்டியையும் அறவிடுகின்றன. இதன் மூலம் பெருந்தொகைப்பணத்தை இலாபமாக வங்கிகள் ஈட்டுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

# பேரீச்சம்பழம் பண்டவரி குறைப்பு

ரமழான் காலத்தை முன்னிட்டு இறக்குமதி செய்யப்படும் பேரீச்சம் பழங்களுக்கான விசேட பண்டவரி எதிர்வரும் நாள்களில் குறைக்கப்படவுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.
சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)

# குடும்பமே நற்செய்தியின் அறிவிப்பிடம்




"நான் நற்செய்திப் பணியாளராகி நற்செய்தியை அறிவிக்க ஆசைப்படுகிறேன். எனது பணியை எங்கிருந்து தொடங்கவேண்டும் என்று ஒருவர் குருவிடம் கேட்டார். "உன் குடும்பத்தில் எத்தனை பேர்?" என, குரு அவரிடம் கேட்க, எட்டு பேர் என்றார். "உங்கள் குடும்பமே உங்களுக்கு நற்செய்தியை அறிவிக்க நல்ல இடம், அங்கிருந்து தொடங்கலாம்" என்று குரு கூறினார். எது நற்செய்தி அறிவிப்பு?
தெருமுனை, அன்பியம், அயல் நாடுகள், அருட்கொடைக் கூட்டங்கள், திருவிழாக்களில் உரத்து பேசுவது மட்டுமல்ல,மாறாக எமது முன்னுதாரண வாழ்வே நற் செய்தியாகும். இன்றைய சூழலில் ஆலயங்களில் மக்கள் வரவு குறைந்து கொண்டு போகிறது. சிறுவர்,இளையோர் ஆலயங்களுக்கு வருவதில் அக்கறை கொள்வதில்லை.பெற்றோர், பெரியோர் ஊக்கமளிக்க வேண்டும். எமது குடும்பங்களில் நாம் நற்செய்தியின் விழுமியங்களை கடைப்பிடிக்கும்போது, அதுவே நம் இளைய தலைமுறைக்கு நற்செய்தியை அறிவிக்கும் கருவியாகின்றது. நற்செய்தி மதிப்பீடுகளான அன்பு, இரக்கம், தியாகம், மன்னிப்பு போன்ற நற்பண்புகள் எம்மில் பெருகிடும்போது இறையன்பும், பிறரன்பும் எம்மில் இயல்பாக ஊற்றெடுக்கும். தவக்காலம் இதற்கு ஒரு களமாக அமையட்டும்.

**எஸ். யேசுதாஸ்**, கொழும்புத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் டக்ளஸ் தோற்றுப்போனவர்

## அன்னராசா சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 2

**மீனவர்களின் பிரச்சினையில் முடிவெடுக்க முடியாத அமைச்சரென தானே ஒப்புக் கொண்டுள்ளார் கடற்றொழில் அமைச்சர் என்று அகில இலங்கை மீனவ மக்கள் தொழிற்சங்கத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் அ.அன்னராசா சுட்டிக்காட்டியுள்ளார்.**

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார். 2016 ஆம் ஆண்டு இந்திய வெளிவிவகார அமைச்சு மட்டத்தில் கடற்றொழில் அமைச்சு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானத்தை இன்றுவரை நடைமுறைப்படுத்தவில்லை. மீனவர் பிரச்சினையில் முடிவெடுக்கவேண்டிய கடற்றொழில் அமைச்சரே தற்பொழுது தோற்றுப்போன இராஜதந்திரம் என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றார். மீனவர் பிரச்சினை இராஜதந்திர ரீதியில் இலங்கைக்கு அழுத்தம் வழங்கினால் தான் தனது பதவியை துறப்பேன் எனத் தெரிவித்துள்ளார். இது ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயம் அல்ல. பொறுப்புவாய்ந்த அதிகாரத்திலிருந்து கொண்டு இராஜதந்திரம் தோற்றுப்போய் உள்ளது என்று கூறுவது வேடிக்கையானது- என்றார். (ச-125)

# உணவு பணவீக்கம் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 2

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் படி, நாட்டில் பணவீக்கம் 5.9 சதவீதமாக கடந்த மாதம் குறைந்துள்ளது. இது கடந்த ஜனவரியில் 6.4 சதவீதமாக பதிவானது. இதே வேளை உணவுப் பணவீக்கம் ஜனவரியில் 3.3 சதவீதமாக இருந்தது. இது பெப்ரவரியில் 3.5சதவீதமாக உயர்ந்துள்ளது. (ஒ-இ)

# இல்மனைட் அகழ்வுக்கு எதிராகப் போராட்டம்

அம்பாறை, மார்ச் 2

திருக்கோவில் பிரதேசத்தில் இடம்பெற்று வருகிற இல்மனைட் அகழ்வை தடைசெய்யக் கோரி திருக்கோவில் பிரதேச மக்களால் கண்டனப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. திருக்கோவில் மணிக்கோபுர சந்தியில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு பேரணியாக திருக்கோவில் பிரதேச செயலர்அலுவலம்வரை சென்று இல்மனைட் அகழ்வை நிறுத்தக் கோரி மக்களால் மனுவொன்று கையளிக்கப்பட்டது. (ஒ-இ)

# இனந்தெரியாதோர் தாக்கு; பொலிஸ் அலுவலர் காயம்

இரவுக் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் அலுவலர் ஒருவர் மீது இனந்தெரியாதநபர்கள் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு, முள்ளியவளை - தண்ணீரூற்று கணுக்கேணி சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடந்துள்ளது.

முல்லைத்தீவிலிருந்து முள்ளியவளை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளை மறித்தபோதே அவர்கள் பொலிஸ் அலுவலரை மோதிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

படுகாயமடைந்த பொலிஸ் அலுவலர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் முள்ளியவளைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-19)

# உபாதைக்கு மருந்தெடுத்து மன்றில் முன்னிலையாகுக!

## விமலுக்கு நீதிமன்று உத்தரவு

ஊழல் மோசடி தொடர்பில் தொடரப்பட்ட வழக்கில் விமல் வீரவன்ஸ முன்னிலையாகாமல் வயிற்றோட்டம் உள்ளிட்ட காரணங்களைக்கூறி வரும் நிலையில் அவற்றுக்கு மருந்து எடுத்துவிட்டு முன்னிலையாகுமாறு நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின்போது முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ 75 மில்லியன் ரூபாவுக்கு மேல் வருமானம் ஈட்டியமை தொடர்பில் அவர் மீது இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வழக்குத் தொடர்ந்தது. இந்த வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்டபோது முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ காய்ச்சல், வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கால் அவதிப்பட்டு வருகிறார். அதனால் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை என்று அவரது சட்டத்தரணிகள் குறிப்பிட்டனர்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றில் முன்னிலையாகாது தவிர்த்து வருவதனால் வழக்கு இழுத்தடிப்பு செய்யப்படுகிறது. எனவே விமல் வீரவன்ஸ உடனடியாக தகுந்த மருத்துவரைச் சந்தித்து சிகிச்சை பெற்று நீதிமன்றில் முன்னிலையாகவேண்டும் என்று நீதிமன்று உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் 22ஆம் திகதிக்கும் ஒத்திவைத்தது. (ச-இ)

# காணாமற்போன இளைஞனின் கைபேசி கண்டுபிடிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 2

மாந்தையில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் காணாமற்போன இளைஞனின் கைபேசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மாந்தைகிழக்கில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம் திகதி, ரவிச்சந்திரன் கேமாரஞ்சன் (வயது-24) எனும் தனது மகனைக் காணவில்லை எனத் தந்தையொருவரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

பொலிஸார் முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கையில் காணாமற்போன இளைஞரால் பாவிக்கப்பட்டதென நம்பப்படும் துவிச்சக்கர வண்டி கண்டெடுக்கப்பட்டது.

காணாமற்போன இளைஞனின் கைபேசியை இன்னொரு நபர் பயன்படுத்துவதாக, காணாமற்போன இளைஞனின் சகோதரனால் நட்டாங்கண்டல் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட இளைஞரை அழைத்துச் சென்ற பொலிஸார் அவரின் வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர், வெளிப்பிரதேசங்களுக்குச் செல்வதற்கான தடைவிதித்து அவரை விடுவித்துள்ளனர். கைபேசியை சான்றுப்பொருளாக நீதிமன்றில் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஓ-35)

# புதினம் தெரியுமோ?

உயிரோட இருக்கேக்கதான் சாந்தனை "அந்தா விடுறம், இந்தா விடுறம்" எண்டு சிப்பிலியாட்டி, கடைசியா ஆளையே சாக்கொண்டு போட்டாங்கள் எண்டு பார்த்தால், செத்தபிறகும் அவரின்ர 'பொடியை' கொண்டு வந்து சேர்க்கிறதிலையும் பெரும்பாடாப் போட்டுதாம். முதல்ல அவரின்ர 'பொடியை' ஊருக்கு கொண்டு வாறதா? இல்லையா? எண்டதிலயே குழப்பம். ஏனெண்டால் தன்ர மகன் 33 வருசத்துக்குப் பிறகாவது ஜெயிலால உயிரோட வருவான் எண்டு காத்துக் கொண்டிருந்த அவரின்ர அம்மாவுக்கு "சாந்தன் செத்திட்டார்" எண்டு உடன சொன்னால் வருத்தம் கூடிடுமோ எண்டு குடும்பத்தாருக்கு பயம். அதால முதல்ல அவாவுக்கு இதைப்பற்றி சொல்லேல. பிறகு மெல்ல மெல்லத்தான் சொன்னவை. 33 வருசமா அந்தத் தாய் கண்ட கனவு இப்பிடி சுக்குநூறானால் எப்பிடியிருக்கும்?

"என்ர பிள்ளையின்ர 'பொடியை' எனக்குக் காட்ட வேண்டாம், என்ர பிள்ளை சிறையிலேயே இருக்கெண்டு நினைச்சிட்டு இருக்கிறன்" எண்டு சொல்லி அழுதிருக்கிறா. அதால அவரின்ர 'பொடியை' கொண்டு வர வேண்டாம் எண்டு வீட்டுக்காரர் முதலில நினைச்சிருக்கினம். ஆனால் "சாந்தன் இப்ப உங்கட மகன் மட்டுமில்லை, தேசத்தின்ர பொதுச்சொத்து. அவரைத் தான் நாட்டுக்கு கொண்டு வர முடியேலை. அவரின்ர உடம்பையாவது கொண்டந்து அஞ்சலி செய்யிறது தான் அவருக்கு நாங்கள் குடுக்கிற மரியாதை'' எண்டு கம்பஸ்காரரும், புலம்பெயர் ஆக்களும், இந்தியாவில இருக்கிறவையும் கெஞ்சிக் கேட்டதாலதான் அவரின்ர உடம்பை வீட்டை கொண்டுவர வீட்டுக்காரர் சம்மதிச்சவை.

அதிலையும் அவரின்ர 'பொடி' கட்டுநாயக்கவில வந்திறங்கின உடனேயே, அதைக் கம்பஸ்காரர் பொறுப்பேற்கிறது எண்டும், அப்பிடியே கொண்டந்து ஒரு பொது இடத்தில வைச்சு மக்கள் அஞ்சலி செய்யிறதெண்டும் தான் முதல் ஏற்பாடு. ஆனால் ஏதோ ஒரு தரப்பு , கம்பஸ்காரர் கட்டுநாயக்க எயார்போர்ட் போறதை நிப்பாட்டிப் போட்டுது. அநேகமா கம்பஸ்காரர் பின்னேரத்தில 'சமோசா' சாப்பிடப் போற இடத்துக்காரர் தான் இப்பிடியொரு வேலையச் செய்திருக்கோணும். கம்பஸ்காரர் போகாததால வீட்டுக்காரரே 'பொடியை' கொண்டுவர வேண்டியதாப் போட்டுது. சாந்தன்ர சடலத்தை, அவருக்காக வாதாடின லோயர் புகழேந்தி தான் பொறுப்பெடுத்து இந்தியாவில இருந்து கொண்டந்தவர். எயார்போட்டுக்கு விடியவே 'பொடியை' கொண்டந்தாலும், அதை எடுக்கிறதில ஒரு பெரும் சிக்கல். எந்தச் சாந்தன்ர 'பொடி' கொண்டுவரப்பட்டுதோ, அதே 'சாந்தன்' தான் அதைப் பொறுப்பெடுப்பார் எண்டு சடலத்தை அனுப்பி வைச்ச 'கார்கோ' கொம்பனிக்காரர் பதிஞ்சிருக்கினம். அதால லோயர் புகழேந்தியால அவரின்ர சடலத்தை உடனை எடுக்கேலாமல் போட்டுது. சாந்தன் உயிரோட வந்தால் தான் பொடியை எடுக்கலாம் எண்ட நிலைமை. பிறகு தமிழகத்தில இருக்கிற கொம்பனிக்கு அறிவிச்சு, அவை தாங்கள் விட்ட பிழையைத் திருத்தி, புதுசா பதிஞ்சு, அதின்ர ரிசீற் கட்டுநாயக்கவுக்கு வந்த பிறகுதான் 'பொடியை' எடுக்க முடிஞ்சுதாம்.

அதுக்குப் பிறகும் விடேலை. போஸ்ட் மட்டம், மரணவிசாரணை எண்டு இழுத்தடிச்சுக் கொண்டே இருக்கினம். வாழேக்கதான் சாந்தனை சிறைக்குள்ள வைச்சு சித்திரவதை செய்தியள். சவப்பெட்டிக்குள்ளயாவது கொஞ்சம் நிம்மதியா இருக்க விடமாட்டியளோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
15.09.1978

இறப்பு
14.03.2023

கடந்த 14.03.2023 செவ்வாய்க்கிழமை
இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத்தலைவர்

## அமரர்
## நடராசா கஜந்தன்

(உரிமையாளர்- நியூ மைதிலி ஜ்வலஸ்,
சந்தோஷ் ஜ்வல்லறி)

ஆண்டு ஒன்று அல்ல பல நூறு ஆண்டு ஆனாலும்
ஆறாது உந்தன் பிரிவுத்துயர் அப்பா !
மனையவள் மனம் மகிழ கருத்தில் ஒருமித்து
அன்போடு இல்லறம் அமைத்து
நல்லறத்துடன் பிள்ளைகளை பெற்றெடுத்து
அறிவோடும் ஆற்றலுமாய் வளர்த்து வையத்தில் பிறர் வியக்க
நிழலாய் இருந்து அவர் புகழில் மகிழ்வு கண்டீரே !
ஆயிரம் தடைகள் உறவாய் உரிமையாய் மானிடர் வடிவிலும்
எவ்வடிவில் மலைபோல வந்த போதும்
அத்தனைகளையும் மண்ணுக்குள் புதைத்து
வானம் தொடும் உயரத்துக்கு
வர்த்தகத்தில் உயர்ந்தீரே !
இறையே மூச்சு சேவையே வாழ்வு என
இறைவனோடு இரண்டற கலக்கும் நேரம் மட்டும் வாழ்ந்தீரே !
உங்கள் கனவுகளை நிஜமாக்கி உங்கள் நாமம்
வையத்தில் ஓங்க வாழ்வோம் அப்பா !
கல்வியாலும் ஒழுக்கத்தாலும்
மண்ணில் உயர்வோம் அப்பா !

எமது குடும்பத் தலைவரின் முதலாம் ஆண்டு நினைவுகள் இன்று (02.03.2024) சனிக் கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 10.00 மணிமுதல் 11.00 மணிவரை இடம்பெறும். அந்நிகழ்விற்கு வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

"சந்தோஸ் மஹால்"
இல.270, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்**
**மனைவி, பிள்ளைகள்.**
"சந்தோஸ் மஹால்"
இல.270, நாவர் றோட், யாழ்ப்பாணம்.

**நியூ மைதிலி ஜ்வல்லரீஸ்**
இல. 38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சந்தோஷ் ஜ்வல்லர்ஸ்**
இல. 97A,99V, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவு

நினைவு தினம் : 13.02.2024
அமரர் திரு.ஐயம்பிள்ளை நடராசா
(மைதிலி நகைமாட ஸ்தாபகர்)

நினைவு தினம் 11.02.2024

நினைவு தினம் 02.03.2024







பிறப்பு : 29.12.1949 இறப்பு : 23.01.2023

பிறப்பு : 15.09.1978 இறப்பு : 14.03.2023

## அமரர் திருமதி நடராசா தங்கமலர்

## அமரர் திரு.நடராசா கஜந்தன்

(நியூ மைதிலி ஜுவல்லறி)
(சந்தோஷ் ஜுவல்லறி உரிமையாளர்)

### ஆறா நினைவில் ஓராண்டில் .....!

ஊற்றெனவே நெஞ்சில்
ஊறிடும் அன்புடையாள்!
மாற்றாற்கும் மனமிரங்கும்
மாண்புடைய பண்புடையாள்!
தேற்றிடுமோர் தெய்வமகள்
"தங்கமலர்" என்றிருந்தாள்!
ஆற்றிடுவாள் எங்களையும்
அன்னையவள் இன்றிருந்தால்!
கூற்றனெவே வந்தவிதி
கொண்டு சென்று ஆண்டொன்றோ?

நேற்றிருந்த பாலனுக்கு
என்னபழி நேர்ந்ததன்றோ?
தங்கமலர் வயிறுதித்த
தங்கமகன் போனதென்ன?
அங்கமெல்லாம் துயர் எழ
அழ நடந்த மாயமென்ன?
உங்கள் நினைவெண்ணி
ஏங்குகின்றோம் இந்நாளில்?
எங்கினிக் காண்போமோ
உம்மூவரையும் எந்நாளில்?

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (02.03.2024) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**'சிவனுஜாஸ்' இல.55, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.**

**உரிமையாளரும், பணியாளர்களும்**

**நகுலா ஜுவல்லறி**
இல.45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
இல.30,32, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**நியூ நகுலா ஜுவல்லறி**
இல.109, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதித்தீராத ஈழத்தின் தியாக வரலாற்றில் 'சாந்தன்' எனும் உயிர் சருகாகியிருக்கிறது

## சிறீதரன் எம்.பி. ஆழ்கவலை



யாழ்ப்பாணம், மார்ச் 2

**இதுவரை எழுதித்தீராத ஈழத்தின் தியாக வரலாற்றில் 'சாந்தன்' எனும் இன்னுமோர் உயிர் சருகாகியிருக்கிறது என யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இருபது வயது இளைஞனாக சிறைக்குச் சென்ற தன்மகன் என்றோ ஒரு நாள் தாய்மடி சேர்வான் என்ற சாந்தனின் தாயாரின் 33 வருடக் காத்திருப்பு பொய்த்துப் போய்விட்டது என்பதைத்தான் இலகுவாக எம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தன் இளமைக்காலக் கனவுகளையும், வாழ்வையும் சிறையறைக்குள் குறுக்கிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தின் நீட்சியில் கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி இந்திய உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டதன் பின்னரான காலப் பகுதியில் தாய்முகம் காணவும் தாயகம் சேரவும் எடுக்கப்பட்ட அத்தனை முயற்சிகளும் பயனற்றுப் போய் உயிரற்ற உடலமாக சாந்தன் நாடுதிரும்பும் நிலை ஏற்பட்டமை நான் உட்பட ஓர் இனமாக எம் ஒவ்வொருவரையும் இயலாமையின் விளிம்பில் கூனிக்குறுகி நிற்க வைத்திருக்கிறது. ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராக, எனது தனிப்பட்ட மற்றும் பதவிநிலை இயலுமைகளின் எல்லா எல்லைகளைக் கடந்தும் சாந்தனின் விடுதலைக்கான சில முயற்சிகளை, பல அழுத்தங்களை நானும் முன்னெடுத்திருந்தேன். பலதரப்பு அழுத்தங்கள், கோரிக்கைகள் எல்லாவற்றினதும் கூட்டிணைந்த வடிவமாக இருநாட்டுச் சட்ட நடைமுறைகளின் நெடுநாளைய இழுபறி நிலைக்குப் பின்னர் நாடு திரும்புவதற்கான அனுமதி வழங்கப்பட்டுப் பயண ஒழுங்குகளும் திட்டமிடப்பட்டு எல்லோரது வேண்டுதல்களும் கைகூடவிருந்த கடைசித் தருணத்தில் சாந்தனின் இறப்பு நேர்ந்திருக்கிறது. எந்தச் சமரசங்களுக்கும் உட்படுத்த முடியாத வகையில், ஈழத்தமிழினத்தின் ஏதிலித் தனமும், அதிகாரமற்ற கையறுநிலையும், சாமான்யர்களின் உணர்வுகளை உணரத் தலைப்படாத அரசபீடங்களின் அசமந்தப்போக்கும் விடுதலை வேண்டிய எங்கள் இனத்தின் விடுதலைப் போராளியை காந்திய தேசத்தில் காவு வாங்கியிருக்கிறது. கனத்த இதயத்தோடு மாவீரன் சாந்தனுக்கு எம் புகழ் வணக்கம் - என்றுள்ளது. (ம-66)


# மணலகழ்வுக்கான அனுமதி பிரதேசசபையிடம் வழங்குக

## துணுக்காய் பொது அமைப்புகள் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 2

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் மணல் அகழ்வுக்கான அனுமதியை துணுக்காய்ப் பிரதேசசபையிடம் வழங்குவதன் மூலம் சட்டரீதியான மணல் அகழ்வை கண்காணிக்கமுடியும் என்று பொதுஅமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. துணுக்காய்ப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. துணுக்காய்ப் பிரதேச செயலகம் வழங்கியுள்ள மணல் அகழ்வுக்கான அனுமதியைப் பயன்படுத்தி பெருமளவில் சட்டவிரோத மணல் அகழ்வு நடைபெறுகிறது.

புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி, ஐயன்கன்குளம் பகுதிகளில் கடந்த 14 ஆண்டுகளாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுகிறது. கொக்காவிலிலிருந்து ஐயன்கன்குளம் வரை புனரமைக்கப்பட்ட வீதி, மணல் ஏற்றிச் செல்லும் டிப்பர்களின் தொடர்ச்சியான பயணிப்பால் பெரும் சேதத்துக்குள்ளாகியுள்ளது என்றும் பொது அமைப்புகள் சுட்டிக்காட்டின. (ச-13)



# மகாறம்பைக்குள வீதி புனரமைப்பு ஆரம்பம்

வவுனியா, மார்ச் 2

மகாறம்பைக்குளம் காளிகோவில் வீதி புனரமைக்கும் பணி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இந்த ஆண்டுக்கான ஆயிரத்து 500கிலோமீற்றர் வீதி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளது. குறித்த வீதியின் புனரமைப்புக்காக 27 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (ச-110)

## சிவப்புநாடு நெல் அறுவடை

# நிர்ணய விலையின்மையால் விவசாயிகளுக்குச் சிக்கல்

வவுனியா, மார்ச் 2

வவுனியா மாவட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள் சிவப்புநாடு நெல்லை விதைத்த நிலையில் அறுவடையின் பின்னர் உரியவிற்பனை விலையின்றி இழப்பை எதிர்கொள்வதாக வவுனியா மாவட்ட மாகாணப் பிரதி விவசாயப் பணிப்பாளர் அற்புதசந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா மாவட்டத்தில் 23 ஆயிரத்து 288 ஹெக்டயர் நிலப்பரப்பில் நெல் விதைக்கப்பட்டது. 60 சதவீதமான நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் கீரிச் சம்பா, 362 பி.ஜி., 450 பி.ஜி., 374 பி.ஜி., 300 பி.ஜி., 404 பி.ஜி., சுகந்தன், சீனெட்டி ஆகிய நெல்லினங்கள் விதைக்கப்பட்டன. இதேவேளை கீரிச் சம்பா 8 ஆயிரத்து 500 முதல் 10 ஆயிரத்து 500 ரூபா வரையும், ஏனைய நெல்லினங்கள் 5 ஆயிரத்து 600 ரூபா முதல் 5 ஆயிரத்து 500 ரூபா வரையும் கொள்வனவு செய்யப்படுகின்றன.

இந்நிலையில் சிவப்புநாடு நெல்லினத்தை பெரும்பாலான விவசாயிகள் விதைத்துள்ளதால், அவர்களுக்கு உரிய நிர்ணய விலை விதிக்கப்படாததால் இழப்பை எதிர்கொள்கின்றனர் - என்றார். (ஒ-125)

# இன்றைய தலைமுறையை பாதிக்கும் கல்வி முறை

## யாழ். மாவட்டச் செயலர் விசனம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

இன்றைய மாணவர்கள் தாய் மதத்தையும் தாய்மொழியையும் இருவிழிகளாகக் கருதி காக்கும் தலைவர்களாக உருவெடுக்கவேண்டும். அதேவேளையில் கல்வியில் புத்தாக்கச் செயற்பாடுகளுக்கும் முன்னுரிமையளிப்பதன் மூலமே எதிர்காலச் சவால்களை வெற்றிகொள்ளமுடியும் என யாழ். மாவட்ட செயலர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊரெழு கணேச வித்தியாசாலையின் புனரமைக்கப்பட்ட மண்டபத் திறப்புவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"தற்போதைய கல்வி முறை பரீட்சையை நோக்காகக் கொண்டு போட்டி முறையில் அமைந்ததாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதனால் மாணவரின் உடல், உள ஆரோக்கியம் சிதைக்கப்படுகிறது. மாணவரின் சிந்தனை ஆற்றல் மழுங்கடிக்கப்படுகின்றது.

இந்தக் கல்விமுறை மாணவர்களுக்கு தன்னம்பிக்கையையும், தொழிற்றிறன்களையும் போதியளவு வழங்கவில்லை.

எனவே இளைஞர்கள் எமது பிரதேசத்தில் வளங்களும் வாய்ப்புகளும் இருந்தும் சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிக்கப் பின்னடிக்கின்றனர்.

வெளிநாடுகளுக்குச் செல்வதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர். ஓய்வு நாளில் குடும்பத்தினருடன் நேரத்தைச் செலவிடும்போதே குடும்ப உறவுகள் வலுவடையும்" - என்றார். (ப)

# சிறுபோக கூட்டம்

உடையார்கட்டுக்குள சிறுபோக நெற்செய்கைக் கூட்டம், முத்தையன்கட்டு நீர்ப்பாசனப் பொறியியலாளர் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நெற்செய்கை மேற்கொள்வதற்கு உடையார்கட்டுக் குளத்திலிருந்து எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி நீர் திறந்து வைக்கப்படும் என்றும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதியிலிருந்து மே மாதம் 5 ஆம் திகதிக்குள் சிறுபோக விதைப்பு நிறைவுசெய்யப்படவேண்டும் எனவும் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. குளத்தின் நீர்மட்டம் முழுமையாகக் காணப்படுவதால் ஆயிரத்து 280 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப-13)

# தலைமன்னார் சிறுமி கொலை; சந்தேகநபருக்கு மறியல் நீடிப்பு

தலைமன்னாரில் சிறுமி ஒருவர் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிபதி கே.எல்.எம்.சாஜித் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இறந்த மாணவியின் பெற்றோர், உறவினர் மற்றும் சம்பவ தினத்தன்று சிறுமியின் நடமாட்டத்தை கண்கண்ட சாட்சி என ஐந்து பேர் மன்றில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் சந்தேகநபரை எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டு, வழக்கை ஒத்தி வைத்தது. (எ-60-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சாந்தனின் சாவுக்குப் பின்னால்....!

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுவிக்கப்பட்ட சாந்தன் இலங்கைக்கு வருவதை விரும்பாத சக்திகள் யாரென்பது இப்போது அம்பலமாகியிருக்கின்றது. இந்தியாவின் மத்திய பா.ஜ.க. அரசு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி சாந்தனை இலங்கைக்கு அனுப்புவதற்கான அனுமதியை வழங்கியும் தமிழக அரசு - தி.மு.க.-அதை இழுத்தடித்தமை சென்னை உயர் நீதிமன்றத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழக அரசின் சார்பில். நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி, பெப்ரவரி 22ஆம் திகதி மத்திய அரசின் அனுமதி கிடைத்ததை ஏற்றுக்கொண்டதுடன், ஜனவரி 24ஆம் திகதியிலிருந்து சாந்தனுக்கு நோய்நிலைமை தீவிரமானதால் அவரை அனுப்பமுடியவில்லை என்று சர்வசாதாரணமாகக் கூறியிருக்கின்றார். அவர்களைப் பொறுத்தவரையில் சாந்தனின் உயிரும், அவரது சிறைவாசமும் மிகச் சாதாரணமாக இருக்கலாம். ஆனால் இங்கே 34 ஆண்டுகளாகத் தான்பெற்ற மகனைக் காணாது தவித்த அந்தத் தாயின் ஏக்கம், ஒரு பிடி உணவாவது தன் கையால் ஊட்டிவிடத் துடித்த தாயின் ஆசை இவர்களின் சதியால் நிராசையாகிவிட்டதே.

கருணாநிதி அன்று தமிழர்களுக்குச் செய்த துரோகத்தை அவரது மகன் ஸ்டாலினும் இன்றும் தொடர்கின்றார். தமிழக முதலமைச்சராக கருணாநிதி செய்த துரோகத்தை ஈழத்தமிழர்கள் மறக்கமாட்டார்கள். போர் நிறுத்தத்துக்காக உண்ணாவிரத நாடகம், மருத்துவச் சிகிச்சைக்காகச் சென்ற தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் தாயார் பார்வதியம்மையாரை அனுமதிக்காமல் திருப்பியனுப்பியமை என்று எதையும் ஈழத்தமிழர்கள் மறக்கவோ -மன்னிக்கவோ மாட்டார்கள். கருணாநிதியின் வாரிசாக முதலமைச்சராக அரியணை ஏறியுள்ள ஸ்டாலினும், தன் தந்தைக்கு சற்றும் குறைவில்லாது ஈழத்தமிழர்களுக்கு பெருந்துரோகத்தை அரங்கேற்றியிருக்கின்றார். சாந்தனை விடுவிக்க இந்திய மத்திய அரசு இணங்கியும், தமிழக அரசு அதைச் செயற்படுத்தாமல் நாடகமாடியதை எந்தவகையிலுமே நியாயப்படுத்தமுடியாது.

ஏற்கனவே வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கும், தமிழக மீனவர்களுக்கும் இடையிலான முறுகல் தீவிரமடைந்திருக்கின்றது. தொப்புள்கொடி உறவு என்று சொல்லிக்கொள்வதெல்லாம் உதட்டளவுடனேயே என்கின்ற நிலை உருவாகிவருகின்றது. இப்படியானதொரு சூழலில்தான் சாந்தனின் விவகாரத்தில் தமிழக அரசு நடந்து கொண்ட விதம் ஈழத்தமிழர்களுக்கு வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சியதைப்போன்று அமைந்திருக்கின்றது.

இந்திய மத்திய அரசு எப்போதும் ஈழத்தமிழர்கள் மீது கரிசனை கொண்டதல்ல என்பது தமிழ் மக்களுக்கு நன்றாகவே தெரியும். அதனால்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் கூட இந்திய ஒன்றிய அரசை தூக்கியெறிந்திருந்தார்கள். குமரப்பா - புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு போராளிகளைக் கைதுசெய்து அவர்களின் சாவுக்குக் காரணமாகியமை, திலீபனின் உணவுத் தவிர்ப்பை உதாசீனப்படுத்தியமை, கிட்டுவை வங்கக் கடலில் வைத்து சிறைப்பிடிக்க முயன்றமை என்று இந்திய மத்திய அரசின் துரோகப்பட்டியல் மிக மிக நீளமானது. இறுதிப் போரில் இலங்கை அரசுக்கு சகல வழிகளிலும் உதவியமையையும் ஈழத்தமிழர்கள் என்றுமே மறக்கவோ - மன்னிக்கவோ மாட்டார்கள். எல்லா அழிவுகளையும் செய்துவிட்டு இன்று அபிவிருத்தி என்ற பெயரில் ஈழத்தமிழர்களுக்கு கிள்ளித் தெளித்து விட்டால், நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு தங்களுக்குப் பின்னால் வருவார்கள் என்று இந்திய ஒன்றிய அ ரசு நினைத்து அதைச் செயற்படுத்துமாக இருந்தால் அதைவிட முட்டாள்தனம் வேறில்லை, வரலாற்றிலிருந்து பாரதம் இன்னும் பாடம் கற்கவில்லை என்றும் அது அர்த்தப்படுத்தப்படும். எனவே அபிவிருத்தி மாயைகளால் தமிழர்களை வெல்லமுடியும் எனத் தவறான கணக்கைப்போடுவதை நிறுத்திவிட்டு இந்திய ஒன்றிய அரசாகட்டும், தமிழக அரசாகட்டும் முதலில் ராஜீவ் கொலை வழக்கில் விடுவிக்கப்பட்டு, சிறப்பு முகாம்களில் வலிந்து அடைக்கப்பட்டிருக்கும் ஏனைய மூன்று ஈழத் தமிழர்களையும் சுதந்திரமாகப் பறக்கவிடுங்கள். அவர்களேனும் கொஞ்சம் நிம்மதிக் காற்றைச் சுவாசிக் கட்டும் .



# இந்திய இழுவைப்படகுகளுக்கு எதிராகக் கண்டனப் போராட்டம்

**யாழ்ப்பாணம், மார்ச் 2**

**எல்லைதாண்டி வரும் இந்திய இழுவைப் படகுகளுக்கு எதிரான கண்டனப் போராட்டமொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளதாக நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது.**

நெடுந்தீவுக்கும், நயினாதீவுக்கும் இடையிலான கடற்பகுதியில் நாளையதினம் காலை 9.30 மணிக்கு ஆரம்பித்து முன்னெடுக்கப்படவுள்ளது. இந்தப்போராட்டத்தில் தீவகப் பகுதியைச் சேர்ந்த அனைத்து கடற்றொழிலாளர் சங்கங்களும் இணைந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவைச்சேர்ந்த மீனவர்கள் போராட்டத்தில் கலந்து கொள்ளும் வகையில் நாளை காலை 9 மணிக்கு நெடுந்தீவு துறைமுகத்தில் ஒன்று கூடுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-100)

## பொதுமக்களை ஈர்த்த அநுரவின் இந்தியப்பயணம்

தேசிய மக்கள் சக்தி மீதான மக்களின் அபிப்பிராயமும் செல்வாக்கும் உயர்ந்துள்ளது என்று சுகாதாரக் கொள்கை நிறுவனம் வெளியிட்ட ஜனவரி மாதக் கருத்துக்கணிப்பு அறிக்கையில் தெரியவந்துள்ளது. தேசிய மக்கள் சக்திக்கு 40 வீத மக்களின் அங்கீகாரமும், ஐக்கிய மக்கள் சக்திக்கு 30 வீத மக்களின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் தேசிய மக்கள் சக்தி ஒரு வீதத்தால் ஈர்க்கப்பட்டுள்ளதுடன் ஐக்கிய மக்கள் சக்தி மூன்று வீதத்தால் அதிகரித்துள்ளது.

அநுரகுமார திஸாநாயக்கவின் இந்தியப் பயணம் அவருக்கு மேலும் பிரபல்யத்தை பெற்றுக்கொடுத்துள்ளதென அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## ரூ. 100 மில். இழப்பீடு கோருகிறார் கெஹலிய

கொழும்பு, மார்ச் 2

என்னைக் கைது செய்தது தவறு. கைது செய்தமைக்காக 100 மில்லியன் ரூபா இழப்பீடு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (சி.ஐ.டி.) வழங்கவேண்டுமென முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அடிப்படை உரிமை மீறல் வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். (ஒ-6)

## கிராமஅலுவலர்களுக்கு நேர்முகத்தேர்வு

கிராம அலுவலர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன என்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார். நேர்முகத்தேர்வுகள் எதிர்வரும் 13, 14 மற்றும் 15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற கிராம அலுவலர் தேர்வில் சித்திபெற்ற 4 ஆயிரத்து 232 பேர் நேர்காணலில் பங்கேற்க உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## உத்தியோகபூர்வ இல்லம்; இனி மைத்திரிக்கு இல்லை

கொழும்பு, மார்ச் 2

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்குவதற்கு அமைச்சரவை வழங்கிய அனுமதியை உயர் நீதிமன்றம் இரத்துச் செய்துள்ளது.

2019 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் அவரை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் தொடர்ந்து தங்குவதற்கு அமைச்சரவை அனுமதியளித்திருந்தது.

இந்த அமைச்சரவைத் தீர்மானம் சட்டவிரோதமானது என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார். இந்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த தீர்ப்பை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ளது. (ச-6)

**நாளை**

03.03.2024
ஞாயிற்றுக்கிழமை
மாசி–20

சுபநேரம் : 09.26 – 10.56
ராகுகாலம் : 04.56 – 06.26

**நாளொரு நல்வார்த்தை**

தீயைப் படித்துத் தெரிந்து கொள்வதைவிட
தீண்டி காயம் பெறு. அந்த அனுபவம்
எப்போதும் சுட்டுக்கொண்டே இருக்கும்.

– நா.முத்துக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவு

நினைவு தினம்
13.02.2024

நினைவு தினம்
11.02.2024

நினைவு தினம்
02.03.2024





அமரர்
**திரு.ஐயம்பிள்ளை நடராசா**
(மைதிலி நகைமாட ஸ்தாபகர்)
பிறப்பு 14.04.1947 இறப்பு 17.01.2002

அமரர்
**திருமதி நடராசா தங்கமலர்**
பிறப்பு 29.12.1949 இறப்பு 23.01.2023

அமரர்
**திரு.நடராசா கஜந்தன்**
(நியூ மைதிலி ஜுவல்லறி)
(சந்தோஷ் ஜுவல்லறி உரிமையாளர்)
பிறப்பு 15.09.1978 இறப்பு 14.03.2023

## ஆறா நினைவில் ஓராண்டில் .....!

ஊற்றெனவே நெஞ்சில்
ஊறிடும் அன்புடையாள்!
மாற்றார்க்கும் மனமிரங்கும்
மாண்புடைய பண்புடையாள்!
தேற்றிடுமோர் தெய்வமகள்
"தங்கமலர்" என்றிருந்தாள்!
ஆற்றிடுவாள் எங்களையும்
அன்னையவள் இன்றிருந்தால்!
கூற்றனெவே வந்தவிதி
கொண்டு சென்று ஆண்டொன்றோ?

நேற்றிருந்த பாலனுக்கு
என்னபழி நேர்ந்ததன்றோ?
தங்கமலர் வயிறுதித்த
தங்கமகன் போனதென்ன?
அங்கமெல்லாம் துயர் எழ
அழ நடந்த மாயமென்ன?
உங்கள் நினைவெண்ணி
ஏங்குகின்றோம் இந்நாளில்?
எங்கினிக் காண்போமோ
உம்மூவரையும் எந்நாளில்?

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (02.03.2024) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**'சிவனுஜாஸ்' இல.55, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.**

**உரிமையாளரும், குடும்பத்தினரும்**

**மதனா நகைமாடம்**
70, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5526

**சிறி மதனா நகைமாளிகை**
இல.155 M, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7772

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2

மல்லாகம் கிராம எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க ஸ்ரீ பாஸ்கரன் ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இளையதம்பி நாகேந்திரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் வடக்குப் பிரதேச செயலாளர் திருமதி ரி.சுதீஸ்னர் கலந்து கொள்ளவுள்ளார். (ச)

## பொதுச்சபைக் கூட்டம்

சுன்னாகம், மார்ச் 2

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுத் தெரிவின் பின்னரான முதலாவது பொதுச்சபைக் கூட்டம், சங்கத் தலைவர் வை.பிரபாகரன் தலைமையில் சங்கப் பணிமனையில் இன்று சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பொதுச்சபைப் பிரதிநிதிகள் அனைவரையும் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு குறித்த சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ப-66)



# மகா சிவராத்திரி கலந்துரையாடல்

மன்னார், மார்ச் 2

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி நிகழ்வின் முன்னாயத்த நடவடிக்கை தொடர்பான இறுதிக்கலந்துரையாடல் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. மன்னார் மாவட்ட உதவிச் செயலர் பரந்தாமன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் தலைவர் ராமகிருஷ்ணன், திணைக்களத் தலைவர்கள், ஆலய பரிபாலனசபை உறுப்பினர்கள், இராணுவ- பொலிஸ் உயர் அதிகாரிகள், சுகாதார மருத்துவ அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-56)

## வல்வெட்டித்துறையில் குருதிக்கொடை முகாம்

கொழும்பு, மார்ச் 2

வல்வெட்டித்துறையில் 75 ஆவது குருதிக்கொடை முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிதொடக்கம் நெடியகாடு கணபதி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முகாமில் குருதிக்கொடையாளர்கள் பங்கேற்று குருதிக்கொடையளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-66)





## பாதயாத்திரை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

மகா சிவராத்திரியை முன்னிட்டு உலக சைவ திருச்சபையின் ஏற்பாட்டில் திருக்கேதீஸ்வரம் ஆலயம் நோக்கிய திருத்தலப் பாதயாத்திரை, தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (ப-66)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மார்ச். 2

பிரதேச அபிவிருத்தி வங்கியின் வடமாகாண ஊழியர்களான காலஞ்சென்ற தெய்வேந்திரம் பகீசன் தனிக்க சஞ்சீவ சுமணதாச ஆகியோரின் நினைவாக வடமாகாண ஊழியர் நலன் புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வருடாந்தக் குருதிக் கொடை முகாம் நிகழ்வு, யாழ்.நகரில் அமைந்துள்ள பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் பி.ப. 1 மணி வரை நடைபெறும்.

அனைவரையும் குருதிக் கொடை முகாம் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ப-66)

## சின்னம் சூட்டும் வைபவம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

அகில இலங்கை சைவமகா சபையினரால் முன்னெடுக்கப்படும் மகா சிவராத்திரி நிகழ்வுகளில் ஒரு பகுதியாக அன்பே சிவம் நிகழ்வு மற்றும் சிவதொண்டர் சின்னம் சூட்டும் வைபவம் என்பன யாழ்.நீராவியடியிலுள்ள சைவபரிபாலன சபை மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் வடமாகாணக் காணி ஆணையாளர் அ.சோதிநாதன், கணிதப் பேராசான் பா.இரவீந்திரன், வடமாகாண நீர்ப்பாசனப் பொறியியலாளர் எந்திரி சி.சர்வராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ப-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சிலருக்கு பேச்சினால் வீண் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**இடபம்:** உற்சாகமான நாள். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். சற்று அலைச்சலும் சோர்வும் உண்டாகும். மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைக்கும். காரியத்தடைகள் விலகும்.

**மிதுனம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். செலவுகள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனை எதிர்பார்த்ததைவிடவும் குறைவாகத்தான் இருக்கும். விநாயகரை வழிபடுவது நலம் சேர்க்கும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை தொடங்குவது நல்லது. உடல் அசதி உண்டாகும். விற்பனை விறுவிறுப்பாக நடைபெறும்.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சியை தவிர்க்கவும். பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். நிதானம் அவசியம். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம். சிறுசிறு வாக்குவாதம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவு களையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அவ்வப்போது குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தசங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். துணிச்சலாக முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும்.

**விருச்சிகம் :** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. நண்பர்களைச் சந்தித்துப் பேசுவீர்கள். ஆதாயம் பெற வாய்ப்பு உள்ளது.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை முழு ஒத்துழைப்பு தருவார். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். மகிழ்ச்சி ஏற்படும். விற்பனை அமோகமாக நடைபெறும்.

**மீனம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். சிலருக்கு திடீர்ப் பண வரவுக்கும் எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் இடையூறுகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 2

திருகோணமலை மீன்பிடித்துறைப் பணிப்பாளர் சுதாகரன் சிவபாதசுந்தரம் எழுதிய 'கொத்துவேலி' எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா, யாழிசைக் கவித் தடாகம் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழிசைக் கவித் தடாகம் அமைப்பின் நிறுவுநரான உடுவிலூர் கலா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ப-66)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 2

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணி தொடக்கம் திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறும் என்று ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 07 . 1956



மறைவு
29 . 02 . 2024

### யோகராணி தணிகாசலம் (ராணி)

நீராவியடியை பிறப்பிடமாகவும், புது வீதி ஆறுகால் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யோகராணி தணிகாசலம் (ராணி), கடந்த (29.02.2024) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-கனகம்மா (பிள்ளையம்மா), தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தணிகாசலம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சதாசிவம்-காந்தம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும், இந்திராணி, மல்லிகாராணி (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான ஸ்ரீரஞ்சிதன், ரவிச்சந்திரன் மற்றும், ஜெயராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசகுமார், இராஜேஸ்வரன் (ஜேர்மனி), தமயந்தி (ஆசிரியர் யாழ்/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), உதயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், சிந்துஜன், டிலோஷா (அபிவிருத்தி உத்தியோகத்தர்-மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), டிலக்ஷன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கஜந்தனின் அன்பு மாமியாரும் டானிஹாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (03.03.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புது வீதி
ஆறுகால் மடம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 229 0128, 077 848 3773

(CS 28058) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
26 . 07 . 1952



மறைவு
28 . 02 . 2024

### செல்லத்துரை சாந்தலக்குமி

யாழ். மிருசுவில் உசனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சாந்தலக்குமி 28.02.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சரவணை - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், ஜசிதலா (அவுஸ்திரேலியா), ஜதிகேசன் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - சாவகச்சேரி), ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜாராம் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா), சரண்ஜா (இலங்கை வங்கி - பளை), ஆகியோரின் அன்பு மாமியாரும், மதுமிதா (அவுஸ்திரேலியா), ஹரிஸ்ராம் (அவுஸ்திரேலியா), லிசாஜினன், ஆதேக்சா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சிறீகாந்தன் (இத்தாலி), நந்தலக்குமி, தனலக்குமி, பத்மகாந்தன் (கனடா), ஜீவகாந்தன், முருகானந்தன் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்திராதேவி, சுந்தரலிங்கம், யோகராசா, சிவஜோதி (கனடா), லதா, அனுஷா (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை, பராசக்தி (கனடா), பத்மாவதி, செல்வராசா, பூபதி, ஜெயராசா (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (03.03.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் ஆரம்பமாகி பூதவுடல் காலை 10 மணிக்கு தகனக் கிரியைக்காக ஈச்சங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உசன்,
மிருசுவில்

தகவல்:
குடும்பத்தினர்.
077 585 0313

(CS/29395) J-1

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
திருமதி றிச்சட் குமாரசாமி
அன்ரன் மரியமலர் (ராசாத்தி)

அன்னை மடியில்
05.05.1939

ஆண்டவன் அடியில்
30.01.2024



எத்தனை நாட்கள் நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாது உங்கள் நினைவு
அன்பினால் பண்பினால் நட்பினால் ஆளுமையால்
எங்களை வழிநடத்தினீர் எங்கள் உள்ளங்களில்
குடியிருக்கும் எம் அன்னையை நாம் என்றும்
நினைத்திருப்போம்..

அன்னையின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்போமாக.

என்றும் உங்கள் நினைவுகளுடன்

தம்பி - அ.ஜோர்ச்
மகன் - அ.அல்பேட் ஜன்ஸ்ரின் (மதி)
மருமகள் - அ.ஜொய்சி கொண் செப்ரா
பேர்த்தி - அ.சௌதாஜினி (வங்கி ஊழியர்)
அ.நிறோஜினி (கணினி மென்பொருள் பொறியியலாளர் - Software Engineer)
பேரன் - அ.விதுஷன்
(கணினி தொழில் நுட்பபீட மாணவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச விதைநெல்லையே மன்னாரில் பயன்படுத்துக!

## மன்னார் மாவட்டச்செயலர் அறிவுறுத்து

மன்னார், மார்ச் 2

மன்னாரில் உற்பத்தியாகும் நெல்லையே விதைநெல்லாகப் பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று மன்னார் மாவட்டச் செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார், இரணை இலுப்பைக்குளத்தில் அங்குள்ள விவசாய அமைப்பின் ஏற்பாட்டில் நெல் அறுவடை விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அங்கு உரையாற்றுகையிலேயே மாவட்டச் செயலர் கனகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விவசாயம் என்பது எமக்கு பாரம்பரிய மான தொழிலாகும். அண்மைக்காலமாக இரணைமடு விவசாயிகள் பாரம்பரிய அடிப்படையில் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அனேகமானவர்கள் இங்குள்ள நெல்லையே விதைநெல்லாகவும் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். இது ஆரோக்கியமானதும் வரவேற்கப்பட வேண்டியதுமான விடயமாகும்.

வேறு இடங்களிலிருந்து விதை நெல்லை இங்கு கொண்டுவருவதை விடவும், இங்குள்ள நெல்லை விதை நெல்லாகப் பாவிப்பதற்கான ஏற்பாடுகளில் மன்னார் மாவட்ட விவசாயம் சார்ந்த திணைக்களங்கள் கவனம் செலுத்த வேண்டும். மன்னார் மாவட்டம் நல்ல வளமுடைய மாவட்டம். இதை நாம் தகுந்த முறையில் பயன்படுத்தினால் வறுமை என்பது எம்மிடம் இருக்காது - என்றார். (அ-ம-60)


## அறிவித்தல் கேள்வி கோரல்

யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து) 637.கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம். (பன்றிக்கோட்டு பிள்ளையார் கோயில் அருகாமை) எனும் முகவரியில் அமைந்துள்ள அடித்தளம் மற்றும் 1ம் மாடி கொண்ட சகல வசதிகளுடனான கட்டடம் வாடகைக்கு விடப்பட உள்ளது. இக்கட்டடத்தை பார்வையிடுவதற்கு அலுவலக கடமை நேரம் காலை 8.30-4.00 மணி வரையும், சனிக்கிழமை காலை 8.30-1.30 மணி வரையும் 826/12 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம். (உப்புக்கடை ஒழுங்கை தட்டாதெரு) எனும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகதில் அல்லது தொலைபேசி இலக்கம். 0212223131 இன் ஊடாக தொடர்பு கொண்டு மேற்படி கட்டடத்தை பார்வை இட்டு உடன் வைப்புப் பணம் மற்றும் மாதவாடகைப் பணம் என்பவற்றைக் குறிப்பிட்டு 2024.03.15 ந் திகதிக்கு முன்னர் கேள்விப்பத்திரத்தை நேரில் அல்லது தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்

குறிப்பு: 2024.01.28 ந் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரித்த கேள்வி அறிவித்தல் விளம்பரம் இரத்து செய்யப்பட்டு, புதிதாக கேள்வி அறிவித்தல் விளம்பரம் செய்யப்படுகின்றது. ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும் என்பதுடன் கேள்வி அறிவித்தல் விளம்பர மாதாந்த வாடகை, வைப்புப்பணம் தொடர்பான இறுதி முடிவு இயக்குநர் சபையின் முடிவு என்பதையும் அறியத்தருகின்றோம்.

(CS 42012) V-1

## Smart Science

➤ தரம் ➡ 6 - 11

தமிழ் மொழி மூலமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

➤ பெண் பிள்ளைகளுக்கு மட்டும்.

இடம்:- திருநெல்வேலி

(CS/54177) J-1

தொடர்பு:- 076 369 9495

## வாடகைக்கு தேவை

➤ நோக்கம் - ஒரு தகவல் தொழில் நுட்ப அலுவலகத்திற்கு

➤ வசதிகள் - தரைப்பரப்பளவு 1400 சதுர அடி அல்லது அதற்கு மேல். 2 Toilets மற்றும் வாகனம் நிறுத்துவதற்கான இடம்.

➤ இடம் - யாழ்.நகராட்சி அல்லது நல்லூர் பகுதி

➤ தகவல் - விபரங்கள் பற்றி

077 386 8574

070 411 6987

இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும் அல்லது Whatsapp பண்ணவும் அல்லது sheraj555@gmail.com க்கு மின்னஞ்சல் செய்யவும்.

தகவல்களை மார்ச் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அறியத்தரவும்.

(CS/54196) J-1

## The Royal College of Jaffna

3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைபயில,

By- ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார்,

ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்.

(M.L.T), (M.L.S).

குபேரன் கட்டடம் மாடி, பிரான்பற்று வீதி, சங்கானை.

(CS/54178) J-1

தொடர்பு:- 077 675 1649

## வாடகைத்தாய் தேவை

நல்ல ஆரோக்கியமான வாடகைத்தாய் தேவை.

தங்களின் விபரம் இரகசியமாக வைக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு

(CS/54189) J-1

தொடர்பு:- 074 004 7586

## பிறந்த தினமும் மணிவிழா வாழ்த்தும்




### திரு.சிவராமலிங்கம் ரகுபதி

பயிற்றப்பட்ட ஆசிரியர் (தமிழ்)

**சேவை விபரம்:**

யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
17.08.1988 - 02.10.1997 வரை
யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
03.10.1997 - 05.04.2018
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
06.04.2018 - 01.03.2024

அகவை அறுபதில் மணிவிழாக் காணும் நண்பனே
நயினையம்பதியிலே தோன்றிய புதல்வனே
யாழ். இந்து அன்னை மடியில் கலை பயின்ற தனயனே
இரு தசாப்தங்களுக்கு மேலாய் இந்துவில்
இயற்றமிழை இங்கிதமாய் உரைத்தவனே
உந்தன் தலைமையில் இந்து மாமன்றமும்
முத்தமிழ் விழாக்களும் அரங்கேற்றும் அற்புதங்கள்
உங்களிடம் கலை பயின்ற விழுதுகளாய் இலங்குகிறார் மாணாக்கர்
ஆசிரியத்துவத்தின் உரை கல் நீரன்றோ
ஓய்வுக் காலம் சிறந்திட வாழ்த்துகின்றோம், பணிகின்றோம்
வாழ்க நீடூழி! வாழ்க பல்லாண்டு!

ஆசிரிய நண்பர்கள்.

(CS 28057) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 23 . 12 . 1948



மறைவு 01 . 02 . 2024

## அமரர் அப்பையா இராசேந்திரம்

(கட்டட ஒப்பந்தகாரர், ஸ்தாபகர், முன்னாள் ஸ்ரீராம் மரக்காலை உரிமையாளர் - கொக்குவில்)

கடந்த 01.02.2024 வியாழக்கிழமையன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர். அப்பையா இராசேந்திரம் அவர்க-ளின் 31ம் நாள் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று சனிக்கிழமை (02.03.2024) மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லதத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன த்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


யுவசக்தி வீதி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

இதைத்தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

குடும்பத்தினர்.
077 175 5512
077 533 9008

# மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 09 . 1937



மறைவு 29 . 02 . 2024

## சிவகுரு சுப்பிரமணியம்

யாழ். ஆவரங்கால். புத்தூரைப் பிறப்பிடமாகவும். யாழ் கோவில் வீதி. கனடா Markham ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சிவகுரு சுப்பிரமணியம் அவர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (29.02.2024) அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - நல்லம்மா தம்பதியினரின் பாசமிகு மகனும். காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகனும். சரோஜினி அவர்களின் அன்புக் கணவரும். ஜெயகாந்தி. பத்மினி. ஜீவகன். சுவேந்தினி. ஆகியோரின் பாசமிகு தந்தையும். முருகன். கலாதரன். செல்வன். ரமணன். பாலசுதர்சினி. நிரஞ்சன். ஸ்ரீகரன். ஆகியோரின் அன்பு மாமனாரும். இராசம்மா சிதம்பரநாதன் (புத்தூர்) அவர்களின் அன்புச் சகோதரரும். காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன். புஸ்பராஜா. புஸ்பராணி (ராணி). புஸ்பாலயம் (ஞானம்). புஸ்பராகம் (மனோ). புவி (ராஜன்) மற்றும் புஸ்பாதேவி (ரஞ்சி). புஸ்பாமிர்தம் (பபா). புவேந்திரன் (இந்திரன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும். செந்தூரன். ஆதவன். ஆதித்தியன். அர்ச்சயன். ஆர்த்தி. சஞ்ஜீவன். காயத்திரி. மாதவன். அபிராமி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை (04.03.2024) கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
சகோதரி
021 205 8888
075 775 4881

புத்தூர்

(CS/54194) J-1

## யாழ்ப்பாணத்தில் களமிறங்கிய தேரர்

ஜெனசெத பெர முனக் கட்சியின் தலைவர் பத்திர முல்ல சீலரத்தின தேரர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் பரப்புரை நடவடிக் கைகளை மேற் கொண்டார். யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலை யத்தில், தனது கட்சியின் கோட் பாடு, இந்த அரசாங் கத்தால் மக்கள் படும் துயரம், புதிய அரசியல் பயணம் தொடர்பில் மக்க ளுக்கு விளக்கங்களை வழங்கினார். அதேநேரம், அவர் தையிட்டில் சட்டவி ரோதமாக அமைக் கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி காலி நந்தாராம தேரரை யும் சந்தித்தார். வலிகாமம் வடக் கில் மீள்குடியமர்ந்துள்ள சில குடும்பங்களுக்கு அரிசிப் பொதிகளை யும் வழங்கினார்.

(எ-23)

நெஞ்சை விட்டகலாத

# ஓராண்டு நினைவு நாள் அஞ்சலி

## அமரர் ஞானசூரியர் சிவக்குமரன்


(முன்னாள் வடமாகாண விளையாட்டுத் திணைக்கள அமைய அலுவலர்)

நினைவு நாள் - 02.03.2024

திதி - பூர்வபக்க ஏகாதசி (20.02.2024)



எங்கள் பாசத்திற்கும் அன்பிற்கும் பாத்திரமான
அன்பு மகனே குமரா!
சிவன் இராத்திரியில் உயிர் பெற்று சிவக்குமரன்
நாமமுடன் உலகிற்கு ஓடிவந்த கணம்
உள்ளம் கொண்ட உவகை என்றும் அழியாத
நினைவுகளாக நிழலாடிக் கொண்டிருக்க
உடல் நோய் என்று நாற்பது ஆண்டுகள்
அறியாத உன் தேகம் சடுதியாக வந்த
திடீர்க் காய்ச்சலால் உன் உளத்திடம் - உறுநோயால்
வலுவிழந்து காலனவன் உயிர் பறித்த
காரணத்தைத் தாங்கிடுமோ எம் மனம்- அன்றி
காலன்தான் அறிவானோ?
எம் தாளாத வயதிலும் உன் தலைகவிழாமல் இருக்க
நீ நடந்து வந்த பாதையில் நம்பிக்கை துளிர்விட
நாயகனாய் எமக்கு நீ மிளிர்வாய் என்று
நாடாத தெய்வமெல்லாம் நாடிய எமக்கு
நட்டாற்றில் விட்டதுபோல் உம்பிரிவு வாட்டுதடா - குமரா
ஏன் இந்த அவசரமோ எமக்குத்தான் எது புரியும்
தந்தவனும் அவன்தான் எடுத்தவனும் அவன்தான்
சமய தத்துவ ரீதியில் நீ தனித்துவமானாய்
ஏகாதசியில் சிவன் கழல் பற்றிய நீ
தேவலோக சிரஞ்சீவியாக அவன் கழலில்
சாந்தி பெறுவாய் குமரா.
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி



மண்ணில் 22.02.1982

விண்ணில் 02.03.2023

பிரிவால் துயருறும்

குடும்பத்தினர்

நயினாதீவு - 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீந்திக்...



திருகோணமலை கோணேஸ்வர இந்துக்கல்லூரி மாணவனுமான ஹரிஹரன் தன்வந்த் நேற்று அதிகாலை இந்தியாவின் தனுஷ்கோடியில் இருந்து தனது சாதனை நீச்சல் பயணத்தை ஆரம்பித்து, நேற்று மதியம் தலைமன்னாரை வந்தடைந்தார். யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் கொன்சியூல் ஜெனரல் சாய் முரளி, தலைமன்னாரில் கரையேறிய ஹரிகரன் தன்வந்தை நேரில் சந்தித்து, பாராட்டுகளையும் வாழ்த்தையும் தெரிவித்தார்.

பாக்குநீரிணையை நீந்திக் கடந்த ஹரிஹரன் தன்வந்துக்கு பாடசாலைச் சமூகத்தினர், பொது அமைப்புகள், பொது மக்கள் என ஏராளமானோர் தலைமன்னார்க் கடற்கரையில் பாராட்டி வாழ்த்தினர். (அ-26)

**இலவச துரித மீட்டலும் மாதிரிப் பரீட்சைகளும்** **G.C.E (O/L) 2024**

இலங்கை தொழில்சார் கற்கைகள் நிறுவனமும் இலங்கை தொழில்சார் கல்வி வளர்ச்சி மன்றமும், கொழும்பின் அனுசரணையுடன். நாடளாவிய ரீதியில் க.பொ.த. (சாதாரணதர) - 2024 இல் O/L பரீட்சைகளிற்கு தோற்றும் மாணவர்களுக்கான முற்றிலும் இலவசமாக ஒழுங்கமைக்கப்பட்ட சகல பாடங்களிற்குமான துரித மீட்டலும், மாதிரிப் பரீட்சைகளும்

**எதிர்வரும் 02.03.2024 இலிருந்து ஆரம்பமாகின்றன**
**காலம் : பங்குனி, சித்திரை 2024**
**நேரம் : சனி, ஞாயிறு பிரிவு I 9-12, பிரிவு II 2-5 PM**

**தொடர்புகளுக்கு: 074 2349120**

தலைவர் 25.02.2024 செயலாளர்

(CS 28063) V-1

## சங்கிலி...

மானிப்பாய் - கட்டுடையில் இந்தக் கொள்ளைச் சம்பவம் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

காரைநகர் - யாழ்ப்பாணம் வீதியில் குறித்த பெண் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோதே, கொள்ளையர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர். இதுதொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-125)

## மோ.சைக்கிள்...

சிகிச்சை பெற்று வருகின்றார். இறப்புத் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## வீட்டிலிருந்து சடலம் மீட்பு

வவுனியா, மார்ச் 2

வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர், அவருடைய வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வல்லிபுரம் தர்மகுலசிங்கம் (வயது- 66) என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

அவருடைய குடும்பத்தினர் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளதால், அவர் வவுனியாவில் உள்ள தனது வீட்டில் தனித்து வாழ்ந்து வந்துள்ளார்.

குடும்பத்தினர் அவருடைய அலைபேசிக்குத் தொடர்புகொண்ட போது பதில் ஏதும் கிடைக்காததையடுத்து, அவர்கள் அயல் வீட்டுக்காரருக்குத் தொடர்பை ஏற்படுத்தி தமது குடும்பத்தலைவர் தொடர்பில் விசாரித்துள்ளனர். எனினும், அவர்கள் அவருடைய நடமாட்டத்தைக் காணவில்லை என்று தெரிவித்ததையடுத்து, விடயம் வவுனியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டு வீட்டைத் திறந்து பார்த்த போது அவர் படுக்கையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் அழுகிய நிலையில் காணப்பட்டதால் மூன்று தினங்களுக்கு முன்னர் அவர் இறந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர். (அ-ம-131)

பண்டத்தரிப்பு பரிஸ் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்(வ-து)

## கண்ணீர் அஞ்சலி



கிராமிய பொருளாதார கூட்டுறவுத்துறை ஆய்வாளரும், வடக்குக் கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் (NCDB) தலைவரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளருமான **கலாநிதி அகிலன் கதிர்காமர்** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி சகுந்தலாதேவி கதிர்காமர்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு பண்டத்தரிப்பு பரிஸ். ப.நோ.கூ.சங்கம் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தலைவர், பொது முகாமையாளர்,**
**பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்,**
**பண்டத்தரிப்பு பரிஸ் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்.**

(CR 42022) A-1

## மரண அறிவித்தல்

பிறப்பு . 17 . 12 . 1970



இறப்பு . 17 . 02 . 2024

**பரஞ்சோதி சாம்பசிவதாசன்**

**"பொங்குதமிழ்: அழகு சாதன வாணிபம், சந்தை உட்புறம், கிளிநொச்சி, "ஆ" உற்பத்தி உரிமையாளர், கூத்தாதோட்டம், வதிரி, கரவெட்டி.**

அன்னார் அமரர்களான பரஞ்சோதி - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும், மாளினி அவர்களின் அன்புக் கணவரும், அமரர் சுப்பிரமணியம் - வேதநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், அரண்யா, ஆத்திகன், இளவெயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர் கண்ணதாசன், விக்கினதாசன் (அவுஸ்திரேலியா), தணிகைதாசன் (உதயநகர் கிளிநொச்சி), இராமதாசன் (அன்பழகன், மாஸ்ரர் / சிறி), வல்லிபுரதாசன் (விசுவமடு) ஆகியோரின் சகோதரரும், திருஞானச்செல்வன் (ஜேர்மனி) அவர்களின் உடன்பிறவா சகோதரரும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CR 42024)A-1

## 45ஆம் நாள் நினைவஞ்லி அழைப்பு

பிறப்பு . 31 . 12 . 1988



இறப்பு . 19 . 01 . 2024

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் வேலுப்பிள்ளை அமல்ராஜ்**

அவர்களின் ஞாபகார்த்தமான ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (03.03.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கைதடி மேற்கு இணுங்கி தோட்டம், அன்னை இரத்தினம் மணி மண்டபத்தில் நடைபெற உள்ளதால் அந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கைதடி மேற்கு,**
**கைதடி.**

**குடும்பத்தினர்.**
**0774208071**

(CS 28065) A-1

## முதலாம் ஆண்டு நினைவு தினம்

தோற்ற 23 . 0[illegible] . 19[illegible]7



மறைவு 14 . 03 . 2023

யாழ். உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

**அமரர் திருநாவுக்கரசு யோகேஸ்வரி**

**அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

பண்பின் உறைவிடமாய்,
பாசத்தின் திருவுருவாய்
மலர்ந்த எம் அருமைத் தாயே!

எல்லோர் மனதிலும் என்றும்
அணையாத சுடராய்
வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள் அம்மா!

அகவை ஒன்று அகன்றே நின்றாலும்
அழியாத நினைவலைகள்
எம் அகத்தில் நின்று ஆழத்திலே
வாட்டி வதைக்கின்றது அம்மா!

அன்பின் உருவான தாயே
எம் உயிரினுள் உயிராகி உறவிலே கலந்து
ஏற்றமுடன் நாம் வாழ ஏணியாக இருந்திடுவீர் அம்மா!

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்..!

**குடும்பத்தினர்.**

(CS 28064) A-1

மேலதிக மாவட்டச்செயலராக

# ஜெயகாந்த் பதவியேற்பு



முல்லைத்தீவு, மார்ச் 2 முல்லைத்தீவு மாவட்டத்தின் மேலதிக மாவட்டச்செயலராக (காணி) சி.ஜெயகாந்த் நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். இவர் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய நிலையில் தற்போது பதவியுயர்வு பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-19)


## வீடு வாடகைக்கு

உடுவில் கிழக்கு சுன்னாகம் மானிப்பாய் வீதி, உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு.
(அலுவலகங்களுக்கு விரும்பத்தக்கது).
தொடர்பு: 076 984 3572

## Vacancy

நிர்வாக அலுவலர் (பெண்)
பிரபல நிறுவனத்திற்கு ஆங்கிலம், ICT அறிவுள்ள 30 வயதிற்குட்பட்ட நிர்வாக அலுவலர்க்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.
ஞாயிற்றுக்கிழமைக்குமுன் தொடர்பு கொள்ளவும்.
சம்பளம்: 25,000/-
074 264 0484
(CS/29351) J-1

## காணி, வீடு விற்பனைக்கு

யாழ். வடமராட்சி நெல்லியடி நகரப் பகுதியில் அதி சிறந்த நல்ல சூழலில் ஒன்றேமுக்கால் பரப்பு குடியிருப்புக் காணியும், யாழ். சுண்டுக்குழி கச்சேரிக்கு அருகாமையில் நவீன வசதிகள் கொண்ட முற்றிலும் குளிரூட்டப்பட்ட (A/C) அறைகளுடன் அழகிய, புதிய மாடிவீடும் விற்பனைக்கு உண்டு.
(தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்)
070 757 2666, 070 750 2666
(CS/28053) J-1


## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 12 . 1948



மறைவு 28 . 02 . 2024

### குமாரசாமி தியாகராஜா

(ஓய்வுநிலை பிரதி அதிபர், சிரேஷ்ட போதனாசிரியர் - யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில்)
(அகில இலங்கை சமாதான நீதவான்)

அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலி மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி தியாகராஜா அவர்கள் கடந்த 28.02.2024 அன்று காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தங்கராசா - இரத்தினேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்வலட்சுமியின் அன்புத் தம்பி யும், தவரூபன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - R/ACLG OFFICE, கிளிநொச்சி), பகீரதன் (உத்தியோகத்தர் - நொதேர்ன் சென்றல் வைத்தியசாலை), கபிலன் (சாரதி - யாழ். பல்கலைக்கழகம்), வித்யானி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நளினி, பபிகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், லோஜிதன், ஹீர்த்தீஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (03.03.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
தொ.பே:077 507 3244
(CS 28054) A-1

வெடுக்குநாறி

## ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரியை நிறுத்தச் சதி!

வவு. மார்ச் 2 வவுனியா வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி மகா சிவராத்திரி வழிபாட்டில் சைவ மக்கள் ஈடுபடவுள்ள நிலையில், இதைத் தடுக்கும் விதமாக சிங்கள பௌத்த பீடமொன்று பல்வேறு சதிநடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. முல்லைத்தீவில் நேற்று நடைபெற்ற சிறப்புத் தேவையுடையவர்களுக்கான உதவி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் தி.தவபாலன் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். (ம-19)

## அறிவித்தல்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் (குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவை பிரிவு 16 ன் கீழான அறிவித்தல்)

1. தம்பிராசா சசிதரன் தலைவர்.
   அம்பாள் சனசமூக நிலையம்.
   செம்பாட்டன் தோட்டம்.
   வட்டு தெற்கு. வட்டுக்கோட்டை.
2. செல்வராசா கிறேஸ்குமார்
   செயலாளர்.
   அம்பாள் சனசமூக நிலையம்.
   செம்பாட்டன் தோட்டம்.
   வட்டுதெற்கு. வட்டுக்கோட்டை.
3. நாகன் கிருஸ்ணபவான்
   பொருளாளர்.
   அம்பாள் சனசமூக நிலையம்.
   செம்பாட்டன் தோட்டம்.
   வட்டுதெற்கு. வட்டுக்கோட்டை.

வழ.இல :-
நாணாவிதம் /111/2017 எதிர் மனுதாரர்கள்

1. கார்த்தி செல்லத்துரை
   தலைவர்
2. கதிரவேலு இராசையா
3. அருணி இராசேந்திரம்
4. கணபதி இராசா
5. வேலு தேவராசா
   மனோன்மணி அம்மன்
   பரிபாலனசபை,
   வட்டுக்கோட்டை மனோன்மணி
   அம்மன் ஆலயம்.
   வட்டு தெற்கு. வட்டுக்கோட்டை.

எதிர்மனுதார்கள்

இவ்வழக்கானது மேற்படி மனுதாரர்களினால் கௌரவ இம்மன்றில் 2017.03.27 ஆம் திகதிய தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் பிரதான நிவாரணமாக வேண்டப்பட்டவாறு மனுவில் விபரிக்கப்படுவதும் வட்டுக்கோட்டை மனோன்மணி அம்மன் ஆலயத்திற்கு உரித்தான ஆதனங்களிற்கு மனுதாரர்களே என்ற ஒப்படைப்பு கட்டளை (Westing order) உரித்துடையவர்கள் என்ற கட்டளை கோரியுள்ளமையால் மேற்படி ஆலயத்துடன் தொடர்புடைய எவரும் எதிர் வாதிட அக்கறையுள்ள எவரும் இதன் பின் ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனங்கள் தொடர்பில் அல்லது மேலே மனுதாரர்களால் கோரப்பட்ட நிவாரணம் வழங்குவது தொடர்பில் ஆட்சேபனை இருப்பின் 04.03.2024 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கௌரவ மன்றில் தோன்றி தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.


நீதிமன்ற கட்டளைப்படி

வரைவு
மனுதாரர்களின் சட்டத்தரணி

பதிவாளர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 19 . 09 . 1931



இறப்பு 01 . 03 . 2024

### சீமாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை

(ஓய்வுபெற்ற C.W.E. உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணம் புதிய வீதி, கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகவும், தற்போது வவுனியா அண்ணாநகர் சுற்றுவட்ட வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சீமாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை நேற்று (01.03.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மேரி ஞானப்பூவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மைக்கல் செல்லையா, ஞானப்பிரகாசம் அருளப்பு, செல்லம்மா, மரியம்மா, பாக்கியம், றோசலின் ஆகியோரின் அன்புச் சகோதரரும், எவான்கலிஸ்ரா சுபோதினி (ஆசிரியை வெளிக்குளம் கனிஸ்ட உயர்தர வித்தியாலயம் - வவுனியா), யஸ்ரின் சுவேந்திரன் (தாதிய உத்தியோகத்தர் ஊர்காவற்துறை ஆதார வைத்திய சாலை), காலஞ்சென்ற கிறிஸ்ரிக் கஜேந்திரன், ஜெராட் ராஜகுலேந்திரன் (வைத்திய நிபுணர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருபநாயகம் (கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர், வவுனியா), நிரோஜினி (சித்த மருத்துவர், யாழ்ப்பாணம்), தர்சினி (வைத்திய நிபுணர் யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், சபின்சன், செரபீனா, மேசி மதுஷா, மெரின் ஆன்சிகா, அனுவர்ஷா, யஸ்விதன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.03.2024) பி.ப 2.00 மணியளவில் புனித அந்தோனியார் ஆலயத்தில் (வவுனியா, றம்பைக்குளம்) திருப்பலியைத் தொடர்ந்து இரம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாந்தனின்...

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்தும், நீண்டநேர இழுத்தடிப்புகளுக்குப் பின்னரே சாந்தனின் புகழுடல் குரலற்றவர்களின் குரல் அமைப்பால் பொறுப்பேற்கப்பட்டது. சாந்தனின் சடலம், குரலற்றவர்களின் குரல் அமைப்பால் பொறுப்பேற்கப்பட்டதையும் அவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நீர்கொழும்பு மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டதையும் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் முருகையா கோமகன் உறுதிப்படுத்தினார்.

சாந்தனின் சடலத்தின் மீதான உடற்கூற்றுப் பரிசோதனைகள் நேற்று இரவு நிறைவடைந்தன. எனினும், மரண விசாரணைகள் (பத்திரிகை அச்சுக்குப்போகும் வரை) நிறைவடையவில்லை. சாந்தனின் மைத்துனர் சடலத்தைப் பொறுப்பேற்பதற்காகச் சென்றுள்ளபோதிலும், மரண விசாரணைக்காக வும் மேலதிக நடவடிக்கைகளுக்காகவும் இரத்த உறவைச் சேர்ந்தோர் வரவேண்டும் என்று மருத்துவமனையால் தெரிவிக்கப்பட்ட நிலையில், நேற்று இரவுவரை சடலம் உறவினர்களிடமோ அல்லது பொறுப்பாளனவர்களிடமோ பாரப்படுத்தப்படவில்லை. இதனால், தமக்குப் பதிலாக மைத்துனரிடம் சடலத்தை வழங்குமாறு சாந்தனின் இரத்த உறவுகளால் சத்தியக்கடதாசியை அனுப்ப இன்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதனால், இன்று காலை அல்லது நண்பகலே, சட்டச்சிக்கல்களை நிவர்த்தித்து சாந்தனின் புகழுடல் யாழ்ப்பாணத்தை நோக்கிய தனது பயணத்தை ஆரம்பிக்கும் என்று கருதப்படுகின்றது. சிலவேளைகளில் தாமதமாகவும்கூடும். வரும் வழியில் வவுனியா, மாங்குளம் மற்றும் கிளிநொச்சியில் சாந்தனின் புகழுடல் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. இன்னும் பல இடங்களிலும் அஞ்சலி நிகழ்வுகளை முன்னெடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிய வருகின்றது.

நாளை மாலையே சாந்தனின் திருவுடல், யாழ்ப்பாணம், உடுப்பிட்டி, இலக்கணாவத்தையில் உள்ள அவரது இல்லத்துக்கு எடுத்துவரப்படவுள்ளது. தொடர்ந்து வடமராட்சியிலும், யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியை அண்டிய ஓர் இடத்திலும் சாந்தனின் புகழுடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

'முன்னதாக ஞாயிற்றுக்கிழமை சாந்தனின் இறுதிக்கிரியைகள் இடம்பெறும் என்று திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், இந்தத் தாமதங்கள் காரணமாக, தற்போதைய நிலவரப்படி திங்கட்கிழமையே சாந்தனின் இறுதிக் கிரியைகள் இடம்பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன' என்று அவரது குடும்பத்தினர் நேற்று இரவு அறிவித்துள்ளனர்.

சாந்தனின் உடலை இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரும் பெரும் பணியை சட்டத்தரணி புகழேந்தி முன்னின்று மேற்கொண்டார். அவர் சாந்தனின் இறுதிக்கிரியைகளிலும் கலந்து கொள்ளவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-100-125-26)

## சாந்தனின் உடலை...

இருநாட்டுத் தூதரக ரீதியான உறுதிப்படுத்தல்களுடன் கூடிய ஆவணங்களின் அடிப்படையில் எடுத்துவரப்பட்ட சாந்தனின் உடலை, அவரது குடும்பத்தின் சார்பில் நெருங்கிய குடும்ப உறுப்பினர் ஒருவர் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தியத் தூதரகம் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டச்செயலகத்தரப்புகள் மூலம் குறித்த குடும்ப உறுப்பினரிடம் சாந்தனின் உடலைக் கையளிப்பதற்கு உரிய அனுமதியினை வழங்கும் ஆவணங்கள் இருந்த நிலையில், எயார் பில்லில் சாந்தனின் உடலத்தினை பொறுப்பேற்பவரின் பெயருக்கு பதிலாக உயிரிழந்த சாந்தனின் பெயரே அச்சிடப்பட்டிருந்துள்ளது. இதையடுத்து சடலத்தைக் கையளிப்பதில் திடீர் சிக்கல் ஏற்பட்டது. ஏனைய ஆவணங்கள் சரியாக இருந்த நிலையில் குறித்த தவறை சரிசெய்து புதிய திருத்தப்பட்ட ஆவணத்தை விரைவாகப் பெற்று உடலினைக் கையளித்திருக்க முடியும் எனக் கூறப்படுகிறது. இருப்பினும் சுமார் ஆறு மணிநேரம் தாமதிக்கப்பட்டு நேற்று மாலை 5 மணிக்கே விமான நிலையப் பகுதியில் இருந்து சடலம் விடுவிக்கப் பட்டுள்ளது. இந்தநிலையில் இந்தியத் தூதரகத்தினால் வழங்கப்பட்டிருந்த ஆவணத்தில் சாந்தனின் உடலத்தின் மீது இலங்கையிலும் மீள் உடற்கூற்றுப் பரிசோதனை செய்யப்படவேண்டும் எனக் குறிப்பிடப் பட்டதை அடுத்து நீர்கொழும்பு மருத்துவமனைக்குச் சடலம் கொண்டு செல்லப்பட்டது.

முன்னதாகவே குடும்பம் சார்பில் குறித்த உறவினர்தான் உடலினைப் பொறுப்பேற்பார் எனத் தகவல் வழங்கப்பட்டு உரிய அனுமதிகள் பெறப்பட்டிருந்த நிலையில், விமான நிலைய பொலிஸாரின் மரண விசாரணைக்கு குடும்ப உறுப்பினர்கள் யாராவது ஒருவர் இருக்கவேண்டும் என அதற்குப் பின்னதாகவே பொலிஸாரினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து மரண விசாரணை நடவடிக்கையினைத் தொடர்வதற்கு மாற்று ஏற்பாடுகள் பொலிஸாரது அறிவுறுத்தலுக்கு அமைவாக குடும்பத்தாரால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதனால் இன்று நண்பகல் அள வில்தான் சாந்தனின் உடல் கிடைப்பதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்தத் தாமதம் பொது அஞ்சலி நிகழ்வுகளைத் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ள பின்னணியிலேயே, அஞ்சலிப்பு நிகழ்வுகளைத் தடுக்கும் வகையில் அல்லது குழப்பும் வகையில் இந்தத் தாமதங்கள் மேற்கொள்ளப் படுகின்றனவா? என்று அஞ்சலி நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ள அமைப்புகள் கேள்வி எழுப்பியுள்ளன. (அ-ம-100)

## இலங்கை...

ஆளுநர் உட்பட அதிகாரிகள் சிலரை எதிர்வரும் 5ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு அழைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுக்கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்றுக்கூடியது. இதன்போதே மத்திய வங்கியின் அதிகாரத் தரப்பினரை கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு அழைப்பது தொடர்பில் முடிவெடுக்கப்பட்டது.

மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட அதன் பணியாளர்களின் சம்பளம் 70 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கு ஆளும் மற்றும் எதிர்தரப்பின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி, மத்திய வங்கியின் ஆளுநரை நாடாளுமன்றத்துக்கு அழைத்து விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என வலியுறுத்தினர்.

புதிய மத்திய வங்கிச் சட்டத்துக்கு அமைய மத்திய வங்கி சுயாதீனப்படுத்தப்பட்டுள்ளதால் சம்பள விவகாரத்தில் தலையிட முடியாது என நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது. இவ்வாறான நிலையில் இலங்கை மத்திய வங்கியின் நிர்வாக சபையின் அங்கீகாரத்துடனும் தொழிற்சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே தமது ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. சம்பள அதிகரிப்பு தொடர்பில் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்க மத்திய வங்கி தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

## ஜனாதிபதித்...

மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

"எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். பொதுத்தேர்தலுக்குக் காலம் உள்ளது. எனவே, ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும் என்பது நூறு வீதம் உறுதி. தேர்தலில் தேசிய வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார். பரந்துபட்ட கூட்டணி அமைக்கப்படும். நெருக்கடி நிலையில் இருந்து ஜனாதிபதியும், அமைச்சர்களுமே அர்ப்பணிப்புடன் நாட்டை மீட்டனர்.

அதேவேளை, சம்பள உயர்வு தொடர்பில் மத்திய வங்கி எடுத்துள்ள முடிவு தவறு. அது மீள்பரிசீலனை செய்யப்படவேண்டும்" - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-44)

## சஜித்...

பித்தார். அவருக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய ஐக்கியம் மற்றும் அமைதி ஆகியவற்றுக்கான குழுவின் தலைமைப் பதவி வழங்கப்பட்டுள்ளது. (அ-ம)

## வடக்கின்...

வலுசக்தி அமைப்புமுறைகளை உருவாக்குவது தொடர்பான உடன்படிக்கையில் இலங்கை நேற்றுக் கைச்சாத்திட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்மூலம், இந்திய அரசாங்கத்தின் முழுமையான நிதி உதவித் திட்டத்தின் கீழ் நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு ஆகியன எதிர்வரும் 2025 ஆம் ஆண்டுக்குள் மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி அமைப்பு முறைகளைப் பெற்றுக் கொள்ளும் என்று அமைச்சர்காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்தியாவைத் தளமாக கொண்ட அதானியின் 'சோலர் கிளீன் எனர்ஜி சொலுசன்ஸ்' என்ற நிறுவனம் இந்தத் திட்டத்தின்கீழ் 530கிலோ வாட்ஸ் காற்றாலை மின்சாரம் மற்றும் ஆயிரத்து 700 கிலோவாட்ஸ் சூரிய சக்தி உட்பட சக்தி அமைப்புகளை இந்தத் தீவில் உருவாக்கவுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம)

## இ.போ.ச....

காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மீசாலை கிழக்கைச் சேர்ந்த சிவநாவலன் பரணிதரன் (வயது-18) என்ற மாணவனே இவ்விபத்தில் சிக்கி உயிரிழந்தவராவார். இவர் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை அதிபரின் மகனுமாவார். அதிகாலையே பாடசாலைக்குச் சென்று மரதன் பயிற்சியை முடித்துவிட்டு காலை 6 மணியளவில் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி அதிவேகமாகப் பயணித்த இ.போ.ச. பேருந்து மாணவரை மோதித்தள்ளியது. இதனால் மாணவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிகசிகிச்சைக்காகயாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். குறித்த விபத்தில் மாணவன் பயணித்த துவிச்சக்கர வண்டியும் சுக்கு நூறானது. விபத்தை ஏற்படுத்திய சாரதி சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-26-100-9-66-131)

**வேலையாள் தேவை**
தேனீர்க் கடையில் வேலை பழக விரும்பும் ஆண்கள். 18-25 வயது வரை.
Cont:076 294 3552

**காணி விற்பனைக்கு**
இராசபாதை வீதியில் வீட்டுடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 986 5457

**விவசாயிகளுக்கு**
இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மழைத்தூறல் பைப் (Rain Hose Pipe)
Brand KSNM 40mm, 50mm அத்துடன் தூறல்
நீர்ப்பாசனத்திற்கான சகல பொருட்களும் இப்பொழுது எம்மிடம்.
(உங்கள் தேவைக்கேற்ப பொருத்தியும் தரப்படும்)


"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"
ஆர்க் . என் . கம்பனி
- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020
Hotline: 071 535 7799 / 071 973 9917

**காணி விற்பனைக்கு**
புத்தூர் - மட்டுவில் பிரதான வீதியில் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.
2 பரப்பு - 5 லட்சம். கையிருப்பில் 20 காணித்துண்டுகள் மாத்திரம் உள்ளன.
தரகர் தேவையில்லை
பார்வையிடும் நேரம்:
காலை: 8.30 - மாலை 6.00
தொடர்புகளுக்கு: 076 659 0583
074 260 0617
076 109 8504
(CS 280611)V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவு

நினைவு தினம் : 13.02.2024

நினைவு தினம் : 02.03.2024





பிறப்பு 14.04.1947 இறப்பு 17.01.2002

அமரர்
## திரு.ஐயம்பிள்ளை நடராசா
(மைதிலி நகைமாட ஸ்தாபகர்)

பிறப்பு 15.09.1978 இறப்பு 14.03.2023

## அமரர் திரு.நடராசா கஜந்தன்
(நியூ மைதிலி ஜுவல்லறி)
(சந்தோஷ் ஜுவல்லறி உரிமையாளர்)



11.02.2024
## அமரர் திருமதி நடராசா தங்கமலர்
பிறப்பு : 29.12.1949 இறப்பு : 23.01.2023

### ஆறா நினைவில் ஓராண்டில் .....!

ஊற்றெனவே நெஞ்சில் ஊறிடும் அன்புடையாள்!
மாற்றாற்கும் மனமிரங்கும்
மாண்புடைய பண்புடையாள்!
தேற்றிடுமோர் தெய்வமகள்
"தங்கமலர்" என்றிருந்தாள்!
ஆற்றிடுவாள் எங்களையும்
அன்னையவள் இன்றிருந்தால்!
கூற்றனெவே வந்தவிதி
கொண்டு சென்று ஆண்டொன்றோ?
நேற்றிருந்த பாலனுக்கு
என்னபழி நேர்ந்ததன்றோ?
தங்கமலர் வயிறுதித்த
தங்கமகன் போனதென்ன?
அங்கமெல்லாம் துயர் எழ
அழ நடந்த மாயமென்ன?
உங்கள் நினைவெண்ணி
ஏங்குகின்றோம் இந்நாளில்?
எங்கினிக் காண்போமோ
உம்மூவரையும் எந்நாளில்?

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (02.03.2024) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

'சிவசனுஜாஸ்' இல்லம்
இல.55, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: மைதிலி நகை மாடம் (PVT) Ltd.
யாழ் மைதிலி ஜுவலர்ஸ்
தொ.பேசி:077 376 8952



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org